# ராதாவின் கையிலிருந்த 'ரிவால்வரை'

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 106
தேசிய தினசரி

பிலவங்க வைகாசி 14 ஸபர் 17 ஞாயிற்றுக்கிழமை [28-5-67]

## பறித்துஎடுத்தேன்

### வாசு சாட்சியம்

— நமது விசேஷ நிருபர் —

மைலாப்பூர், மே 27

'ராதாவின் கையிலிருந்து பறித்தெடுத்த 'ரிவால்வரை' பொலிசாரிடம் கொடுத்தேன்' என்று திரைப்படத்தயாரிப்பாளர் திரு. கே. வாசு எம் ஜி ஆர்-ராதா வழக்கில் சாட்சியமளிக்கையில் கூறினர்

திரைப்பட நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்ததாகவும்தம்மைத்தாமே சுட்டுத்தற்கொலைசெய்ய முயன்றதாகவும் திரைப்பட நடிகர் எம். ஆர். ராதா மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்குத்தொடர்ந்து மூன்ருவது தினமாக

[6-ம் பக்கம் பார்க்க]

# ஏழு பேருக்கு நான்கு பேர் வீதம் பிரஜாவுரிமை

## மசோதாவுக்கு பிரதமர் கொண்டுவரும் திருத்தம்

கொழும்பு, சனி

இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமுல் செய்யப்படும் பொழுது ஏழு பேருக்கு நான்கு வீதம் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்னும் ஒரு திருத்தத்தை இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவுக்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கொண்டு வந்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படவிருக்கும் இந்திய வம்சாவழியினரான ஐந்தேகால் லட்சம் பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமையும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவிருக்கும் மூன்று லட்சம் இந்திய வம்சாவழியினருக்கும் ஏழு பேருக்கு நான்கு பேர் வீதம் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது பிரதமர் கொண்டுவந்துள்ளதிருத்தம் அதாவது ஏழு பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டால் அதே சமயம் நான்கு பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும் என்பது தான் இத்திருத்தம்.

இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை பரிசீலனை செய்யும் பார்லிமெண்டின் நிரந்தரக்குழு இன்று முழு நாளும் கூடி ஆராய்ந்து ஜூன் மாதம் 2-ந் திகதிக்கு முன் அதை இறுதி வடிவமாகத் தயாரிக்கத் தீர்மானித்துள்ளது. ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் சமர்ப்பித்துள்ள திருத்தங்களை இக் குழு பரிசீலனை செய்கிறது.

ஜூன் 2 ந்திகதி பார்லிமெண்ட் மீண்டும் கூடும் போது குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென்று இப்பொழுது தெரிகின்றது.

### அண்ணுவின் கோரிக்கை

சென்னை, மே 27

திருவள்ளுவர் தினத்தை தேசிய விடுமுறைதினமாக அறிவிக்கவேண்டும் என்று தமிழக முதல்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை மத்தியஅரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 'ஊமையான அண்ணனை குத்திவிட்டு ஓடினர்'

### உடுவில் கொலைவழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''வள்ளி வீட்டு வேலிக்கு அருகில் நின்ற எதிரி, பிறவி ஊமையானஎன் அண்ணனை குத்திவிட்டு ஓடிவிட்டார்.''

உடுவில் கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளித்த வல்லிபுரம் கந்தையா மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு நேற்றுக்காலை வட பகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் வீ. தென்னக்கோன்முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் உடுவிலில் 65ம் ஆண்டு டிசம்பர் 2-ம் திகம் வல்லிபுரம் ஐயம்பிள்ளையை கொலைசெய்ய முயற்சித்ததாக தவசி கந்தையா மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ. அன்ரனி நியமிக்கப்பட்டிருந்தார்.

கந்தையா சாட்சியமளி

[6-ம் பக்கம் பார்க்க]

வெற்றிடங்கள்

கல்வனைஸ்ட் வாளித் தொழிற்சாலையில் பயிற்சிபெற்று, வேலைசெய்ய 16—19 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் தேவை.

தச்சுவேலை, மேசன்வேலை அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில்விண்ணப்பிக்கவு

எல்பிஹெம் ஹவுஸ்

மாவிட்டபுரம், :: :: தெல்லிப்பழை

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்

இரவு நேரத்தில் விடுதிக்குள் புகுந்து

## தாதிகளின் ஆடைகளை கிழித்து அட்டகாசம்

### பொலிஸ் விசாரணை நடக்கிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் மேல்மாடியிலுள்ள தாதிகள் விடுதியில் நேற்று முன்தினமிரவு யாரோ சிலர் புகுந்து அங்கு தாதிகளின் உடைகளைக் கிழித்தும் அவற்றை உளக்கியும் தாறுமாருக வீசியும் சேதப்படுத்திவிட்டிருந்தார்கள்.

இதன் காரணமாக நேற்றுக் காலை கடமையாற்றுவதற்காக வந்த சுமார் ஐம்பது தாதிகள் தமது கடமைகளைச் செய்ய முடியாது தவிக்கவேண்டி நேரிட்டது. வெளியூர்களிலிந்து வரும் தாதிமார்கள் தமது ''யூனிபோம்களை'' இந்த விடுதியிலேயே விட்டுச்செல்வதாகவும் வேறுமாற்று உடைகளையும் அங்கு வைத்துச் செல்வதாகவும் அவையெலாம் கசக்கப்பட்டு கிழிக்கப்பட்டதால் தாம் எந்த உடையோடு சென்று கடமையாற்றுவதுஎன தமக்குத்தெரியவில்லையென அங்கு கலங்கிய கண்களுடன் நின்று கொண்டிருந்த தாதிகளில் ஒருவர் நேரில்சென்று பார்வையிட்ட நமது நிருபரிடம் தெரிவித்தார்.

சட்டையொன்று இனி மேல் போட முடியாத படி தாறுமாருகக் கிழிக்கப்பட்டு நிலத்தில் வீசப் பட்டுக்கிடந்தது.

இந்தத் தாதிகள் விடுதியில் அவர்களது 'யூனிபோம்', சேலைகள், சட்டைகள் ஆகியன கிழிக்கப்பட்டிருந்ததோடு அவர்களின் படுக்கை விரிப்புக்கள் ஆகியனவும் மோசமாக கிழிக்கப்பட்டிருந்தன. ஜன்னல் சேலைகள் மற்றும் மேசைச் சேலைகள் ஆகியனவும் இவ்வித அவல நிலைக்குள்ளாகியிருந்தன.

எவ்வளவு கஷ்டப்பட்டு நாங்கள் துணிகளை வாங்கி வைக்கிறேம், இப்படிச்செய்தால் நாங்கள் என்ன செய்வது? ஏன்தான் எங்களுக்கு இவ்வளவு அநியாயம்

[6-ம்பக்கம்பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்

குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு உண்மையில் கடவுளுடையது; நம்முடையதல்ல. கருணையுள்ள கடவுளால் எல்லாம் முடியுமென்ற நம்பிக்கை பூரணமாக நமக்கு ஏற்படும் போது, நமது தனிப்பட்ட பொறுப்பு உணர்ச்சியும் நீங்குகின்றது.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஸ்ரீ வைகாசி மீ 14உ. (28-5-67)

## இந்துமாமன்ற முயற்சி

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக அகில இலங்கை இந்து மாமன்றம் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றது. அதன் முயற்சிகளைப் பாராட்டுகிறோம். இதே சமயம் இந்து மாமன்றத்தின் முயற்சிகள்வெற்றி பெறுவதற்கு இந்துப் பொது மக்களும் அரசாங்கமும் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும். உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்குமென்றே நம்புவோம்.

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் கிளர்ச்சிகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் சில இயக்கங்கள் முயற்சி செய்து வந்ததும் இந்தக் கிளர்ச்சிகளினால் அமைதி குலைந்து அதன் விளைவுகள் எப்படியாகுமோ என்ற அச்சம் ஏற்பட்ட சமயத்தில் அரசாங்க அதிபர் உட்பட பலரும் நிலைமையைச் சமாளிக்க முயற்சி எடுத்தனர். எனினும் துரதிர்ஷ்டவசமாக எதிர்பார்த்த அளவுக்கு அந்த முயசிகள் வெற்றி தரவில்லை. இந்துக்கள் சம்பந்தப்பட்ட இந்த ஆலயப் பிரவேச விஷயத்தில் இந்துக்களும் இந்து சமய ஸ்தாபனங்களும் அக்கறை செலுத்தாமல் 'ஏனோதானோ' என்ற நிலையிலிருந்ததால் இந்துக்களல்லாதவர்களும் சமய நம்பிக்கை அற்றவர்களும் கூட சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன்றனர். இதில் அவர்களைக் குறை சொல்லவும் இடமில்லை. பல்லாண்டுகளாக நம் மக்களில் ஒரு பகுதியினரை நாமே ஒதுக்கி வைத்து வந்தோம் அவர்களுக்கு உள்ள உரிமையை அளிக்கவும் மறுத்து வந்தோம். அவர்கள் இன்று விழிப்படைந்து தங்கள் நிலையை இனியாவது மாற்றுங்கள் என்று கேட்ட போதும் கவனம் செலுத்தத் தவறினோம். இச்சமயத்தில் இந்துக்களல்லாதவர்களும் சமய நம்பிக்கையற்றவர்களும் 'அவர்களுக்காக' முன்வந்தபோது அவர்களில் சிலர் 'அவர்கள்' காட்டியவழியில் சொல்ல முன்வந்தனர்.

நல்லவேளையாக இச்சமயத்தில் இந்துமாமன்றம் தனது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து அமைதியான முறையில், பேச்சுவார்த்தைகள் மூலம் மனமாற்றம் செய்து ஆலயப்பிரவேசப்பிரச்னைக்கு முயற்சி செய்யத் தொடங்கியது. இந்துக்கள் தங்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து கொள்ளச் செய்தது இந்துமாமன்றத்தின் முதல் வெற்றி. சில ஆலயங்களின் கதவுகள் எவ்வித 'பரபரப்பும் சலசலப்பு'மில்லாமல் எல்லோருக்கும் திறந்து விடப்பட்டிருக்கின்றன. இதுவும் இந்துமாமன்றத்தின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியே.

ஆலயப்பிரவேச விஷயத்தில் ஆலயதர்ம கர்த்தாக்கள், அர்ச்சகர்கள் உட்பட இந்துப் பொது மக்களும் அரசாங்கமும் இந்துமாமன்றத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளித்து அதன் முயற்சி பூரணவெற்றி பெறச் செய்யவேண்டும்.

# "அக்கராயன் குளத்தில் காந்தி கிராமம், கிராமிய சர்வகலாசாலை"

## காந்தி நூற்றுண்டு சின்னமாக அமையும்

உருத்திரபுரம், சனி

அக்கராயன் குளத்தில் காந்தி கிராமம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது. இங்கு கிராமிய சர்வகலாசாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக் காந்தி கிராமம் அரசாங்கத்தால் வழங்கப்படும் 75 ஏக்கர் நிலத்தில் அமையும். இந்த 75 ஏக்கரில் 25 ஏக்கர் நிலம் இப்பொழுது கிடைத்துள்ளது. இவ்விருபத்தைந்து ஏக்கர் நிலத்தில் காடுகளை அழிக்க சுமார் 500 சிரமதானிகள் கலந்துகொள்வர் காந்தி கிராமமும் அதில் அமையும் கிராமிய சர்வகலாசாலையும் காந்திஜி நூற்றுண்டு நினைவாக விளங்கும்.

அக்கராயன் குளத்தில் அகில இலங்கை காந்தி சேவாசங்கத்துக்கு நல்ல நீர் வளத்துடனான காணி 25 ஏக்கர் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து மேலும் 50 ஏக்கர் நிலத்துக்கு இச் சங்கம் விண்ணப்பித்துள்ளது. ஏற்கனவே கிடைத்த 25 ஏக்கர் நிலத்தில் காடழிக்கும் சிரமதான பணியை வரும் ஜூன் மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் இச் சங்கம் நடாத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தச் சிரமதானப்பணிக்கு "வேலை அனுபவத்திட்டத்தின் கீழ்" யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து 300க் கதிகமான உயர் வகுப்பு மாணவர்களை அனுப்ப வடபிரதேச வித்தியாதிகாரி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் ஏற்பாடு செய்து வருகின்றார். இதற்கான நடவடிக்கைகளில் கரைச்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. இ. யோகநாதனும் ஈடுபட்டுவருகின்றார்.

அக்கராயன்குளத்தில்சிரமதான மூலம் காடழிக்கும் பணிக்காக யாழ்ப்பாண பகுதியில் உள்ள ஆசிரிய கலாசாலை மாணவர்களும் ஏனைய கல்லூரிகளில் உள்ள உயர் வகுப்பு மாணவர்களும் சுமார் 300 பேருக்கதிகமான கல்லூரி ஆசிரியர்களின் கண்காணிப்புடன் ஜூன் மாதம் 11-ம் திகதி மாலை அக்கராயன் குளத்துக்கு அனுப்பப்படுவார்கள். 12-ம், 13-ம் திகதிகளில் அங்கு காந்தி சேவா சங்கத்துக்குரிய 25 ஏக்கர் காணியில் உள்ள காட்டை அழிப்பார்கள். 14-ம் திகதி காலையில் அக்கராயன் குளத்திலிருந்து மாணவர்கள் தத்தம் இடங்களுக்குத் திரும்புவார்கள். பிரயாணத்துக்கான போக்குவரவு ஏற்பாடுகளை கல்வி அதிகாரிகள் இலங்கை போக்குவரத்து சபையுடன் தொடர்பு காண்டு செய்கின்றார்கள்.

அக்கராயன் குளத்தில் மாணவர்கள் தங்குவதற்கான கூடாரம் குடிநீர் முதலிய வசதிகளை கல்வி அதிகாரிகள் நிலஅளவை இலாகாவினதும் நில அபிவிருத்தி இலாகாவினதும் உதவியுடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளார்கள். காடு அழிக்கும் இந்த வேலை அனுபவத்திட்டத்துக்கு உதவிசெய்யவும் மாணவர்களுடன் சேர்ந்து வேலைசெய்து காட்டவும் வழிகாட்டவும் குடியேற்றப் பகுதிகளில் உள்ள காட்டு அனுபவசாலிகளும் படித்த மாணவர் குடியேற்றத்திட்டத்தில் உள்ளவர்களுமாக சுமார் 200 பேர் இந்த சிரமதானத்தில் கலந்து கொள்வார்கள். இதற்கான முயற்சிகளை கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் கரைச்சிபகுதி காரியாதிகாரி செய்துவருகிறார்.

அக்கராயன் குளத்தில் இச்சிரமதானப் பணிகளில் கலந்துகொள்ளும் சுமார் 500 சிரமதானிகளுக்கும் உரிய, வெளிச்சம், சிற்றுண்டி, தாகசாந்தி முதலிய வற்றுக்கான வசதிகளை அகில இலங்கை காந்தி சேவா சங்கம், தருமசீலர்களதும், வர்த்தகர்களதும், கமக்காரர்களதும் ஒத்துழைப்புடன் செய்யவிருக்கின்றது. சிரமதான காலங்களில் கருத்தரங்கமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவைகள் மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கும், நல்ல கருத்துக்களைப் பரிவர்த்தனை செய்வதற்கும், சமூக சேவை உணர்ச்சியை வளர்ப்பதற்கும் உதவும்.

இத்திட்டம் சம்பந்தமாக அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் புதிய தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி நமது நிருபரிடம் கூறியதாவது-

"காந்தியடிகள் தோன்றி 100 ஆண்டுகள் பூர்த்தியாகும் 1969ம் ஆண்டு காந்தி நூற்றுண்டு விழா கொண்டாடும் வருடமாகும். இந் நூற்றுண்டு விழாவின் ஞாபகச் சின்னமாக அக்கராயன் குளத்தில், இலங்கையில் இதுவரை அமைக்கப்படாத ஒரு புதிய திட்டமாகக் காந்தி கிராமமும், சர்வோதயநெறிமுறைகளுக்கமைய ஒரு கிராமிய சர்வகலாசாலையும் அமையும்.

காந்திக் கிராமம் என்ற பெயருடன் அமையவுள்ள இந்தக் கிராமிய சர்வகலாசாலையில் சாதாரண மனித வாழ்க்கைக்கு —கிராமிய வாழ்க்கைக்குரிய கல்வி அளிக்கப்படும். அனாதை மாணவர்களும், ஏழை மாணவர்களும் இங்கு கல்வி கற்க ஏற்கப்படுவார்கள். இங்கு விவசாயம், விஞ்ஞானம், கலை, வைத்தியம் ஆகிய பல துறைகளில் கல்வி புகட்டப்படும். விவசாயத்துறையில் உணவு உற்பத்திமுறை, விவசாயத்துக்கு இயந்திரங்களை உபயோகிக்கும் பயிற்சி, விற்பனவு, விநியோகம் முதலியனவும் விஞ்ஞானத்தை விவசாயத்துக்கு கொண்டுவரும் வழிமுறைகளும், இலக்கியத்தை வாழ்க்கைக்கு உபயோகிக்கும் முறையும், இசை நாடகம் ஆகிய கலைத்துறைகளை கிராமிய உணர்வுடன் வளர்க்கும் முறையும் ஆயுள் வேதம், இயற்கை வைத்தியத்துறைகளை அபிவிருத்தி செய்தல், உணவு உடைச் சுயதேவைப் பூர்த்தி ஆகிய சாதாரணவாழ்க்கைத்துறைத் தேவைகளைப் பூர்த்திசெய்வது பற்றியும், சமூகத்தில் பரஸ்பரம் உறவை வளர்க்கும் பொதுநலத் துறைகளும் அடங்கும். தாய்ப் பாஷையுடன் சகோதரப் பாஷையின் அறிவும் பிற மொழிகளின் அறிவும் கிராம வாழ்க்கைக்கு அவசியம் என்பன சாதனையின் அனுபவத்தால் கற்பிப்பதும் இதில் சேரும்.

### பெண்களுக்கு

திரு. சின்னத்தம்பி மேலும் தெரிவிக்கையில் இந்தக் கிராமிய சர்வகலாசாலையின் அங்கமாகப் பெண்களுக்கான கல்வித்துறைகளைத் தர்மபுரத்தில் 'கஸ்தூரிபாய் நிலையம்' பயிற்சியளிக்குமென்றும் இங்கு தாய்க்குலத்துக்கான கலைத்துறைகளும், குழந்தை வளர்ப்பு, தாதிப் பயிற்சி, சிறு கைத்தொழிற்றுறைகளும் பயிற்சியளிக்கப்படுமென்றும் கூறினார்.

இத்துறையில் பணியாற்றும் இலங்கையிலுள்ள ஏனைய நிறுவனங்கள் கிராமிய சர்வகலாசாலையின் கிளைகளாக அமைந்து கொள்ளலாம் என்றும் காந்தி கிராமம் அமைப்பு முறையில் ஓர் ஆசிரமம் போல் தனியார்துறையாக இயங்கினாலும், பலதுறைகளில் அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்குமென்றும், இதைப் பூர்த்திசெய்யச் சுமார் 10 வருடகாலமாகலாமென்றும், இவற்றுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் சேவா கிராமத்திலுள்ள திரு. ஈ. டபிள்யு. அரியநாயகம் இங்கு வந்து சிலகாலம் தங்கி உதவுவார் என நம்புவதாகவும் அவர் கூறினார்

இத்திட்டத்துக்குத் தங்களால் முடிந்தவற்றை உதவ விரும்பும் அரசாங்க உத்தியோகத்தர்களும், சமூக சேவகர்களும், அனுதாபிகளும் மற்றும் சிரமதானப் பணியில் ஈடுபட விரும்புகிறவர்களும் உருத்திரபுரத்திலுள்ள காந்தி நிலையத்தாருடன் தொடர்பு கொள்ளவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

பாவிக்காமல் தன் வைராக்கியத்தைக் காத்து வருவதாயும் தெரிவித்தார். இதனால் அவர்மீது மற்றவர்களுக்கு மட்டுமன்றி தம்மைப்பற்றியே தமக்கு புது மதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தம் வாழ்விலே மேன்மையடைந்துள்ளதாகவும் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

உலகை வெல்லவேண்டுமாயின் முதலில் நம்மை நாம் வெல்லவேண்டும். இவ் விஷயத்தில் தான் கடவுளின் உதவி நமக்கு அவசியம். "கூடாத பழக்கத்திலிருந்து என்னைக் காப்பாற்று" என்று உண்மையில் வேண்டினால் அவர் காக்கக்காத்துள்ளார். "காக்கும் என்காவலன்" அல்லவா அவர்? காப்பிக்கு அடிமைப்பட்டிருந்த என்னைக் காத்துவிட்ட அனுபவத்தாலேயே இதைஎழுதுகின்றேன். நமக்குள்ளேயே இருக்கும் அவர் நம்மைக் காக்காவிட்டால் வேறு யாரிதான் காக்க முடியும்?

ஃ ஃ ஃ

சிந்தையுட் சிவமாய் நின்ற செம்மையோடு, அந்தியாய் அனலாய்ப் புனல்வானமாய்ப், புந்தியாய்ப் புகுந்துள்ள நிறைந்த வெம் எந்தை ஏகம்பம் ஏத்தித் தொழுமினே.

—அப்பர் சுவாமிகள்

[சிந்தையுள் சிவமாகி நின்ற செம்மையினோடு அந்தியாகவும், அனலாகவும், புனலாகவும், வானமாகவும் நினைவார் புத்தியாகிய அந்தக் கரணமாகவும் எல்லாவற்றுள்ளும் புகுந்து உள்ளத்தில் நிறைந்த எந்தையாரான காஞ்சிபுரத்து ஏகம்பநாதரை ஏத்தித் தொழுவீர்களாக.]

## ஐயாறன் எழுதுவது

இந்தியாவில் சிகரெட் புகைப்பவர்களுக்கு இருபத்தி எட்டரைக் கோடி ரூபாய் புதியவரியை நிதி மந்திரி மொரார்ஜிதேசாய் போட்டுள்ளார்.

இந்தவரி உயர்வு மிக அதிகம்தான் என்று ஒப்புக் கொள்ளும் அமைச்சர், இதற்கு என்ன சமாதானம் சொன்னார் தெரியுமா? கனம் மெம்பர்களும் மற்றவர்களும் இந்த வரியிலிருந்து தப்ப நல்லவழி புகைக்காமல் இருந்து விடுவது தான் என்றும், அப்படிச் செய்தால், அவர்களது ஆயுளும் நீடிக்கும் என்றும் யோசனை கூறினார்.

ஆனல் மந்திரியின் இந்த நடவடிக்கையால் புகைக்கும் வழக்கம் குறையுமா? சந்தேகமே. அப்படிக் குறையுமென்று மந்திரியும் எதிர்பார்க்கவில்லை. அப்படி நினைத்திருந்தால் புதிய இவ்வரியில் வருமானம் 28 1/2 கோடி அதிகரிக்குமென்று அவர் எப்படிக் கணக்கிட்டிருக்கமுடியும்?

ஃ

ஓர் அன்பர் ஒரு 'சங்கிலி' புகைக்காரர். ஊதிஊதித் தள்ளுகிறார். அவர் மனைவிக்கு இது சற்றும் பிடிக்கவில்லை. பணச் செலவுக்காக அல்ல. புருஷனின் தேக சுகம் கெடுமென்பதற்காகவுமன்று. தங்கள் அருமைக் குழந்தைகளுக்கும் இந்தப் பழக்கம் வந்துவிடுமோ என்று அச்சம். ஐந்து வயதான பையன் இப்போதே அப்பாவைப் பின்பற்றப் பார்க்கிறானும். சிகரெட்டை எடுத்து அப்பாவைப்போல் வாயில் வைத்துக்கொண்டு தீக்குச்சியால் பற்றவைக்க முற்படுகின்றானும் அந்தச் சுட்டிப்பயல்.

இந்தப் பழக்கம் தன் குழந்தைகளுக்கு வரக்கூடாதென்பதில் 'அப்பா'வுக்கும் அதிக கவலை. ஆனல் அப்பழக்கத்தை விட எவ்வளவோ முயன்றும் அது முடியவில்லையாம் என்ன செய்வது? பெற்றோர் இருவரும் படித்தவர்கள். பண்புள்ளவர்கள். இப்பழக்கத்தை விடுவதற்கு ஏதாயினும் நல்ல வழியுண்டா? வரியை எவ்வளவு உயர்த்தினாலும் பயனில்லை. வேறு வழியிருந்தால் இப்பழக்கத்தை விட்டவர்கள் தயவு செய்து தங்கள் அனுபவத்தை எழுதுங்கள். இப்பத்தியில் வெளியிடுகிறேன் எவ்வளவோ தாய்மார்களுக்கு அது பெரும் ஆறுதல் அளிக்கக்கூடும்.

ஃ

மற்றோர் அன்பர். கடற்படையில் சேர்ந்தாராம். விளையாட்டாகக் குடிப்பழக்கம் பிடித்துக்கொண்டது. குடிக்கு அவர் அடிமையாகிவிட்டார். குடித்தால் எந்தக் காரியமும் அவரால் செய்யமுடியுமாம். அப்படி இருந்தவர் சென்ற இரண்டு மாதங்களுக்குமேல் குடியை அடியோடு விட்டுவிட்டாராம். வியப்பபக இருந்தது..

மது அரக்கனை எப்படி வென்றீர்கள் என்று கேட்டதற்கு ஒருநாள் குடிமயக்கத்தில், தான் செய்யக் கூடாத ஒரு காரியத்தைச் செய்துவிட்டதாயும், குடிகாரனென்று தம்மைப் பலரும் கேலிசெய்வதை உணர்ந்து வெட்கப்பட்டு, இனி குடிப்பதில்லை என்று வைராக்கியம் கொண்டு, விட்டதாகவும் சொன்னார். இடையிடையே குடிக்க வேண்டும்போல் தோன்றுமாம். ஆனலும் இரண்டு மாதத்துக்கு மேல் குடியே

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இஸ்ரேல் முற்று முழுதாக அழிக்கப்படும்'

## ஜனதிபதி நாஸர் கடும் எச்சரிக்கை

### அரபு நாடுகளுடன் போரிடும் காலம் தீர்ந்து வருவதாக இஸ்ரேல் அறிவிப்பு

கெய்ரோ, மே 27

இஸ்ரேலுடன் அரபு நாடுகள் ஒரு முழுப் போராட்டத்தில் ஈடுபடுமெனவும், இஸ்ரேல் முற்று முழுதாக அழிக்கப்படுமென்றும் ஐ. அ. குடியரசு ஜனதிபதி நாஸர் அறிவித்துள்ளார். ஐ. அ. குடியரசை அல்லது சிரியாவை இஸ்ரேல் தாக்க முயன்ருல், இந்த நாசகார விளைவை இஸ்ரேல் எதிர் நோக்கவேண்டியிருக்குமென அவர் கூறினுர்.

அரபுத் தொழிலாளர் யூனியன் தூதுகோஷ்டி, ஜனதிபதி நாஸரைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இஸ்ரேலுக்கு அமெக்காரி ஆதரவுகொடுப்பதன் மூலம், மேற்கு ஆசியாவில் போர் நெருக்கடி நிலைமையை உண்டாக்கி வருவதாக அமெரிக்காவைக் கண்டித்தார். பிரிட்டனுக்குச் சுயேச்சையான கொள்கை எதுவும் கிடையாதென்றும், அது அமெரிக்காவின் கைப் பொம்மையாகவே விளங்குகிறது என்றும் நாஸர் கூறினுர்.

மேற்கு ஆசிய விவகாரத்தில் சோவியத் யூனியன் கடைப்பிடிக்கும் கொள்கையை நாஸர் பாராட்டினுர். அத்துடன் மேற்கு ஆசிய பகுதியில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டால், இஸ்ரேல் சோவியத்யூனியனின் எதிர்ப்பையும் சந்திக்கவேண்டி வரும் என்ற சோவியத் யூனியன் அறிவிப்பையும் அவர் குறிப்பாக வரவேற்ருர். பிரான்சின் பாரபட்சமற்ற நிலைக்கும் அவர் தமது பாராட்டைத் தெரிவித்தார்.

பிரெஞ்சு ஜனதிபதி டிகோல், ஜனதிபதி நாஸருக்கு மேற்கு ஆசிய நிலைமை பற்றிக் கடிதம் எழுதியுள்ளதாகப் பாரிசில் கூறப்பட்டது. அக்கடிதத்தில் நெருக்கடியை மோசமாக்கும் வகையில் எந்த நடவடிக்கையும் அவசரப்பட்டு எடுக்கவேண்டாமென டிகோல், நாஸரைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

**காலம் தீர்ந்து வருகிறது**

அரபு நாடுகளுடன் நேரடியாகப் போராட்டத்தில் இறங்குவதற்கான காலம் தீர்ந்துவருவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. அக்காபா வளைகுடாவை ஐ. அ. குடியரசு மீண்டும் திறந்துவிடுவதன் மூலம்தான், நெருக்கடியைத் தளர்த்த முடியுமெனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் வெளியுறவு மந்திரி அமெரிக்க ஜனதிபதி ஜோன்சனுடன் பேச்சுவார்த்தைகள்நடாத்திவருகிருர் அவற்றை முடித்துக் கொண்டு அவர் இன்று டெல் அவிவ் திரும்புவார்.

**மூன்று நிபந்தனைகள்**

மேற்கு ஆசியாவில் போர் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு இஸ்ரேல் மூன்றுநிபந்தனைகளை வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது. அக்காபா வளைகுடா பந்தனத்தை ஐ. அ. குடியரசு ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்; சினுயில் ஐ. அ. குடியரசின் துருப்புகள் குறைக்கப்படவேண்டும். இஸ்ரேல் மீதான அரபு பயங்கரவாதிகளின் தாக்குதலை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். இவைதாம் அந்த மூன்று நிபந்தனைகளாகும்.

இஸ்ரேல் பிரதம மந்திரிக்கு, இஸ்ரேல் மந்திரிசபையில் மாற்றம் செய்யுமாறு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜோன்சனுடன் தாம்நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிக் கனடாப் பிரதமர் பியேர்ஸன்பார்லிமெண்டில் அறிவிக்கையில், அமெரிக்காவும் கனடாவும் மேற்கு ஆசியாவில் ஒரு ஐ. நா. சமாதானப்படை நிறுவுதல் பற்றி உடன்பட்டுள்ளதாகக் கூறினுர். அத்துடன், அக்காபா வளைகுடா சர்வதேசக் கப்பல் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட வேண்டுமென்பதே இரு நாடுகளினதும் கருத்தாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

**யுதாண்ட் அறிக்கை**

நாஸருடன் தாம் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிக்கை ஒன்றை, ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் தயாரித்து வருகிருர். இந்த அறிக்கையை அவர் ஐ. நா. பந்தோபஸ்து சபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பார். கூட்டம், இன்று அல்லது நாளை நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

**சோவியத் கோரிக்கை**

மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் தூண்டுதல் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்கும் வகையில், அதைத்தடுத்து நிறுத்துமாறு சோவியத் யூனியன் மேற்கத்தைய நாடுகளைக் கேட்டுள்ளது. ஐ. அ. குடியரசு, சிரியா ஆகிய நாடுகள் நெருக்கடி நடவடிக்கைகளில் இறங்கமாட்டா என்பது பற்றித் தமக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாக சோவியத் யூனியன் வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**ஆயுத உதவி**

இஸ்ரேலுடனுன போரில் நெருக்கடிக் கட்டத்தில் ஆயுத உதவி அளிக்குமாறு ஐ. அ. குடியரசு, சோவியத் யூனியனைக் கோரியுள்ளதாகத் தெரிகிறது.

**பிரவுண் கருத்து**

தமது ரஷ்ய விஜயத்தை முடித்துக் கொண்டு பிரிட்டன் திரும்ப முன்னர், மாஸ்கோவில் பத்திரிகையாளருடன் பேசுகையில், மேற்கு ஆசியாவின் சமாதானத்தை நிலைநாட்டுவதே சோவியத் யூனியனின் விருப்பமாகுமென பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி ஜோர்ஜ் பிரவுண் கூறினுர். வியட்னும் நிலைமையை சோவியத் யூனியன் மேற்கு ஆசிய விவகாரத்தில் தான் கடைப்பிடிக்கும் நிலைக்குச் சாதகமாகப் பயன்படுத்தமுயற்சிக்க வில்லை யெனவும் திரு. பிறவுண் கூறினுர்.

லண்டன் திரும்பியதும் திரு. பிரவுண், பிரிட்டிஷ் பிரதமர் வில்சனைச் சந்தித்து, மேற்கு ஆசிய நிலைமை பற்றி விவாதித்தார். பிரிட்டிஷ் பிரதமர் தமது கனடா, அமெரிக்கா விஜயத்தைச் சில நாட்களுக்குப் பின் போட்டுள்ளார்.

**ஈரான்**

இஸ்ரேலுக்குப் பெட்ரோல் அனுப்புவதை நிறுத்தும்படி ஈரானைக் கேட்டுக் கொள்ளுமாறு ஐ. அ. குடியரசு, மற்ற அரபு நாடுகளை வேண்டியுள்ளது. ஆனுல், இஸ்ரேலுக்குத் தான் பெட்ரோல் அனுப்புவதில்லை என ஈரான் மறுத்துள்ளது.

**ஈராக்**

இஸ்ரேலுக்கு உதவியளிக்கும் எந்த நாட்டினுடனும் முற்ருகத் தூதரகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதென ஈராக் முடிவு செய்துள்ளது. இம்முடிவு அடங்கிய குறிப்பை ஈராக், பாக்தாத்தில் உள்ள சகல தூதரகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

## இந்தியாவுக்கு சுவீடன் உதவி

புதுடில்லி, மே 27

இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டு மத்திய நிலைய மொன்றை நிறுவ சுவீடன் முன் வந்துள்ளது. இந்நிலையத்துக்கு வருடம் ரூ. 30 லட்சம் செலவாகும்.

## வட வியட்னுமில் விமான தாக்குதல்

### அமெரிக்க 'ஸ்கை ரெய்டர்' சுட்டு வீழ்த்தப்பட்டது

சைகோன், மே 27

வியட்னும் போர் விலக்குப் பிராந்தியத்தின் தென் பகுதியில் அமெரிக்க துருப்புகள் வடவியட்னுமிய துருப்புகளுடன் மோதினர்.

அமெரிக்க தரப்பில் 14 பேர் கொல்லப்பட்டதாகவும், 102 பேருக்குக் காயமேற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. வடவியட்னும் பக்கத்தில் 41 பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கப் போர் விமானங்கள் மீண்டும் வடவியட்னுமில் தாக்குதல் நடாத்தின. வடவியட்னும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும், தரையிலிருந்து விண் தாவும் ஏவுகணைகளும் அமெரிக்க விமானங்களை எதிர்த்துச் சுட்டன. அமெரிக்க விமானமான 'ஸ்கைரெய்டர்' சுட்டு வீழ்த்தப்பட்டது. விமானி கொல்லப்பட்டார். இந்த விமானம் வடவியட்னுமியரால் இதுவரை சுட்டு வீழ்த்தப்பட்ட 505-வது அமெரிக்க விமானமாகும்.

## ஜவகர்லால் நேரு நினைவு தினம்

### மக்கள் மௌன அஞ்சலி

புதுடில்லி, மே 27

இந்தியப் பிரதமரும், ஆசிய ஜோதியாகவும் விளங்கிய ஜவகர்லால்நேருவின் நினைவுதினம் மூன்ருவது ஆண்டாக இன்று நாடெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது அன்புக்குரிய தலைவருக்கு மௌன அஞ்சலி செலுத்தினர்.

தின்மூர்த்தியில் இன்று காலை திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பக்திப் பாடல்களுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. சாந்திபவனுக்கும் மக்கள் சென்று அங்கு நேருவுக்குப் பிடித்தமான அசோக மரத்தின் கீழ் அமைதியான பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இதில் ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசேனும், உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரியும் கலந்துகொண்டனர். திருமதி இந்திரா காந்தி முன்னதாகவே வந்து விட்டுச் சென்ருர்.

தோட்டத்திலுள்ள ஜவஹர்ஜோதி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரும் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

உபராஷ்டிரபதி காலஞ்சென்ற நேருவின் சமாதிக்குச் சென்று மலர் வளையம் சாத்தினுர். திருமதி இந்திராகாந்தி, சிவப்பு ரோஜா மலர்ச் செண்டொன்றை வைத்தார்.

ஜவகர்லால் நேருவின் சிரார்த்த தினத்தையொட்டி காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் வெளியிட்டுள்ள செய்தியில், மறைந்த தலைவர் நேரு உலகனைத்தையும் அரவணைக்கும் கொள்கையை பின்பற்றியவரி எனக் குறிப்பிட்டார். அவர் கடைப்பிடித்த மதச்சார் பற்ற, ஜனநாயக சோஷலிசத்தை மக்கள் வளர்க்கப் பாடுபடவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

மே. பாகிஸ்தான்

## அடிமை முகாம்களில் கொடூர அனுபவங்கள்

### சிறுவர்கள் விளக்கம்

கராச்சி, மே 27

மேற்கு பாகிஸ்தானிலுள்ள ஒரு பகுதியில் 25 அடிமை முகாம்கள் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து 60 சிறுவர்கள் மீட்கப்பட்டனர்.

இச் சிறுவர்கள் பெரும்பாலும் காஷ்மீரின் பாகிஸ்தான் பகுதியிலிருந்தும், முன்னைய வடமேற்கு எல்லைப்பிரதேசத்திலிருந்துமே கடத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் தாம் வாழ்ந்த அடிமை முகாம்களில் நடைபெற்ற கொடூரங்களைப் பொலிசாருக்கு விவரித்தனர்.

ஒரு நேரச் சாப்பாட்டுடன் ஒரு நாளைக்கு 20மணித்தியாலம் வேலை செய்ய இம் முகாம்களிலுள்ளவர்கள்கட்டாயப்படுத்தப்பட்டதாகவும், இப்படித் தொடர்ந்து 5, 6, வருடங்களுக்கு இவர்கள் வேலைவாங்கப்பட்டதாகவும் சிறுவர்கள் தெரிவித்தனர்.

முகாம் காவலாளிகள் தங்களை இம்சித்ததாகவும், தப்பிஓடமுயன்ற போதுஒருவருடையஇரண்டுகால்களும் இக் காவலாளிகளால் அடித்து நொறுக்கப்பட்டதாகவும், நொண்டியாகிய பின்னரும் அவரைத் தொடர்ந்து வேலை செய்யப் பண்ணியதாகவும் அச் சிறுவர்கள் கூறினர்.

இம் முகாம்களை நடாத்திய கொண்ட்ராக்டர்களும அவர்களது ஏஜெண்டுகளும் பொலிசாரின் கைகளில் சிக்குப்படாது மறைந்து விட்டதாகத் தெரிகிறது. ஒரே ஒரு கொண்ட்ராக்டர் மட்டும் இது வரை பொலிசாரிடம் சரணடைந்துள்ளார்.

## ஜபல் பூரில் மாமூல் நிலைமை

புதுடில்லி, மே 27

மத்திய இந்தியாவிலுள்ள ஜபல்பூர் நகரில் ராஜ்ய உணவுக் கொள்கையை எதிர்த்து நேற்று முன்தினம் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து அங்கு நேற்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. நேற்று, எவ்வித அசம்பாவித சம்பவமும் நடைபெறவில்லை. என்றுலும், ஏற்கனவே விதிக்கப்பட்ட 24 மணிநேர ஊரடங்குச் சட்டம், இன்று முற்பகல் 11-15 லிருந்து மேலும் 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டது.

பொலிசார் ரோந்து சுற்றி வருகின்றனர். எந்த நிலைமைக்கும் தயாராக இராணுவமும் துணை நிற்கிறது.

இக் கலவரத்தையொட்டி 77 பேர் கைது செய்துள்ளனர்.

## பீகிங்கில் பிரிட்டிஷ் எதிர்ப்பு

பீகிங், மே 27

ஹாங்கொங்கில் பிரிட்டிஷ் அட்டூழியத்தை எதிர்த்து பீகிங்கில் நேற்றுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பிரிட்டிஷ் தூதரகத்துக்கு முன்னுல் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்கள் காரியாலயச் சுவர்களில் பிரிட்டிஷ் எதிர்ப்பு சுலோகங்களை ஒட்டினர். இந்த ஆர்ப்பாட்டங்களில், பிரிட்டிஷ் தூதரகத்தில் கடமையாற்றும் சீனர்களும், அவர்களது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

விமான

## பொருட்காட்சியை டிகோல் திறந்தார்

பாரிஸ், மே 27

பாரிசில் 27 வது விமான விண்வெளிப் பொருட்காட்சியைப் பிரெஞ்சு அதிபர் டிகோல் திறந்து வைத்தார்.

இப்பொருட் காட்சி பிரம்மாண்டமான தொன்ருகும். இதில் 459 நிறுவனங்கள் பங்கு பற்றுகின்றன. 150 வகையான ரொக்கெட்டுகள், விமானங்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் ஓர் இலக்கியநூல்

## வள்ளுவர் விழாவில் இரசிகமணி

உடுப்பிட்டி, சனி

''திருக்குறள் பாரம்பரிய மிக்க ஒரு தெய்வீக நூலாகும். உலகிலே பற்பல அறிஞர்கள் தோன்றிவரும் இவ்வேளையில் திருக்குறளிலிருந்து பல உண்மைகளும் தோன்றிய வண்ணமே இருக்கின்றன. நீதிநூல்கள் மனிதனின் சட்டதிட்டங்களை வரையறுத்துக்கூறும். ஆனால் இலக்கிய நூல் சிறுவர் முதல் பெரியோர் வரை படித்துச் சுவைத்து இன்புறச் செய்யும்'' மேற்கண்டவாறு கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 11 வது திருவள்ளுவர் நினைவு விழாவின் 2-ம் நாள் நிகழ்ச்சியின் போது இடம்பெற்ற கருத்தரங்கில் பேசுகையில் இரசிகமணி. கனக. செந்திநாதன் கூறினார். கரணவாய் உப தபாற் கந்தோருக்கருகாமையிலுள்ள 'நாவலர் அரங்கில்' நடைபெற்ற 2-ம் நாள் நிகழ்ச்சிகளுக்கு பண்டிதர் திரு. இ. க. முருகேசு தலைமை வகித்தார்.

திருக்குறள் ஓர் இலக்கிய நூலா நீதி நூலா என்னும் தலைப்பில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் திருக்குறள் ஓர் இலக்கிய நூலெனவலியுறுத்திப் பேசுகையில், இரசிகமணி கனக. செந்திநாதன் மேலும் கூறியதாவது: 'மனு தர்ம சாத்திரம், சுக்கிரநீதி, சாணக்கிய நீதி ஆகியமூன்று நீதி நூல்களும் சாதாரண மனிதனைப் பயமுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. ஆனால் திருக்குறள் மனிதனுக்கு அன்பு, அறம் ஆகியவற்றைப் பாரபட்சமின்றி உபதேசிக்கின்றது. உவமைநயம் மிக்கதே இலக்கியம். 1330 குறள்களில் 130 உவமைகள் காணப்படுவதால் குறளை இலக்கிய நூல் எனக் கணிக்கலாம் நீதி நூல்களுக்கு உவமைகள் கிடையாது. திருவள்ளுவமாலை என்னும் நூல் திருக்குறளை இலக்கிய நூல் என ஆணித்தரமாகக் கூறியுள்ளது.''

கவிஞர் திரு. வி. கந்தவனம், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், திரு. நாவேந்தன், திரு ஏ. டி. பொன்னுத்துரை, திரு. சு. கணபதிப்பிள்ளை [சுகுணா] ஆகியோரும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பண்டிதர் இ. க. முருகேசு பரிசுகளை வழங்கினார். கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவியான செல்வி. ம. சுகுணாதேவியின் பரதநாட்டியமும், கழகத்தினரின் பெற்றன.

திரு. க. நாகலிங்கம் நன்றியுரை கூறினார்.

## பரிசளிப்பு விழா

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி 13-வது வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் திருமதி அபயசேகரா பரிசில்கள் வழங்குவார். கதம்பநிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சினித்தம்பியும் உரையாற்றுவார்.

## சிங்களத்தில் பரீட்சை முடிவு

### தமிழ் பரீட்சார்த்தி பெற்றார்

உடுப்பிட்டி, சனி

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. [சாதாரணம்] பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகிய போது வதிரியைச் சேர்ந்த எம். ஜெயவரதராசா என்னும் பரீட்சார்த்தி தமது பரீட்சைப் பெறு பேறுகளை தனிச் சிங்கள மொழியிலேயே பெற்றார். இதனால் பிரஸ்தாப மாணவர் அதிர்ச்சியுற்றார்.

## ''எதிர்கால ஒற்றுமைக்கு மாணவர்கள் வழிவகுக்கவேண்டும்''

வெள்ளவத்தை, சனி

'அரசியல் வாதிகள் இந்நாட்டு மக்களைப் பிரிக்க நினைக்கிறார்கள். ஆனால் அன்புதான் உலக நீதி என்கிற புத்தரின் தர்மத்தை நம்புங்கள். மற்ற இனத்தவரை வெறுக்கக் கூடாது. வாழ்க்கை நிலையற்றது. நாம்வாழும் காலம் சுவையுள்ளதாயும் மற்றவர்களுக்குப் பயனுள்ளதாயும் அமையவேண்டும். மாணவர்கள் வருங்காலத்தில் பெரிய மனிதர்களாக வேண்டியவர்கள். இவர்கள் ஒழுக்கமாக நடந்து எதிர்கால ஒற்றுமைக்கும் நாட்டின் சுபீட்சத்துக்கும் வழி வகுக்க வேண்டும்.'

இவ்வாறு வெள்ளவத்தை லனிதகலா மண்டபத்தில், நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாணவர்கள் மத்தியில் பேசிய ஆசிரியர் திரு. டி. குணசேகரா கூறினார்.

இலங்கையின் பிரதான மொழிகள் இரண்டையும் இரு சாராரும் தெரிந்து கொள்வதில் ஒரு கஷ்டமும் இல்லை. பலமொழிகள் பேசும் நாடுகளில் மக்கள் அமைதியாக வாழ்வதாகவும், நாங்கள், இன, மத பேதங்களைப் பேசிக் காலத்தை வீணாக்கும் சமயத்தில் எமது பொருளாதார வளனுக்காக உழைக்க வேண்டுமென்றும், மனிதனுக்கு மனித உணர்வு அவசியமென்றும் திரு. குணசேகரா கூறினார். திருவாளர் க. இராசரத்தினம், கே. சரத் ஆகியோரும் பேசினர்.

## 'அமைதி தருவது இசை'

—நல்லூர் எம்.பி

யாழ்ப்பாணம், சனி

''மக்கள் மனதில் மகிழ்ச்சியையும் மனதிற்கு அமைதியையும் அளிப்பன இவை போன்ற கலைகளே. ஒரு கலை செழிப்புற்ற காலத்தையே ஒரு நாட்டின் அல்லது ஓர் இனத்தின் வளர்ச்சிக் காலம் எனலாம் இன்றைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் அவ்வாறில்லாவிட்டாலும் தமது பண்டையகலையை வளர்ப்பதில் முன் நிற்கவேண்டும். இதற்கு சகல சங்கீத வித்துவான்களும் ஒன்று சேரவேண்டும்.''

மேற்கண்டவாறு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெற்ற அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 8ம்வருட இசை விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்குத்தலைமை வகித்துப் பேசிய நல்லூர் எம். டாக்டர். இ. மு. வி. நாகநாதன் தெரிவித்தார்.

மன்றச்செயலாளர் சங்கீத பூஷணம் திரு. ஆ. நமசிவாயம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழா இறுதியில் குழந்தைகளின் கதம்பநிகழ்ச்சியும் கலைஞர்வேல் ஆனந்தனின் நவரச நிகழ்ச்சியும் இடம் பற்றன. [ந. நி]

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### ஞாயிறு 28 - 5 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 தோத்திரப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-45 கிறிஸ்தவ ஆராதனை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர்கேட்டவை.

—

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் தீர்த்தோற்சவத்துடன் முடிவடைந்தது.




# டிஸ்பிரின்

கரையக்கூடிய டிஸ்பிரின், வலி, காய்ச்சல், தடிமல், டெங்குச் சுரம், பல் வலி, தசை நார் வலிகள் நோவுகளிலிருந்து வன்மையான துரிதநிவாரணம் தருவதென்று பெரிதும் ஏற்கப்படுவது.

- டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், டெங்குச் சுரம், காய்ச்சற் குணம் ஆகியவற்றால் உடம்பின் சந்துகளில் ஏற்படும் நோவுகளை அகற்ற உதவுகின்றன.

டிஸ்பிரின் கரையக்கூடியது; அது கரையக்கூடியதாகையால் இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிகிறது; விரைவாகச் செறிவதால், டிஸ்பிரின் துரிதமான வன்மையான நிவாரணம் தருகிறது.

டிஸ்பிரின் முற்றிலும் கரைவதாகையால். வன்மையும் பாதுகாப்பும் ஒருங்கே வாய்ந்தது. அது, வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கரையாத துகள்கள் எவையும் உங்கள் வயிற்றில் தங்க விடுவதில்லை.

விரிவாகப் பாவித்தும் பரீட்சித்தும் ஒப்பிட்டும் பார்த்த பின், உலகெங்குமுள்ள டாக்டர்களால் பரந்தளவில் தேர்ந்தெடுக்கப்படுவதால், டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம்.

டிஸ்பிரின் அலுமீனிய உறையில் சுற்றிச் சிலிடப்பட்டிருப்பதால் நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

கரையக்கூடிய டிஸ்பிரின் – வன்மையான பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

...ப் பருகுங்கள்; அல்லது
...விழுங்குங்கள்

றெக்கிட் அன்ட் கோலமன் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்திற்கு

## நடையில் செல்லும் யாத்திரிகர்

உடுப்பிட்டி, சனி

வடமராட்சிப் பகுதியைச் சுமார் 100 யாத்திரீகர்கள் சென்ற வெள்ளிக்கிழமை தொண்டமனாறு செல்வச் சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்குக் கால்நடையாகப் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள் இவர்கள் முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை அம்மன் கோவிலுக்குச் சென்று பொங்கல் விழாவில் கலந்து கொண்ட பின்னர் திருமலை, மட்டக்களப்பு ஊடாகக் கதிர்காமம் சென்றடைவர்.

**வியாபாரம் பெருக விளம்பரம செய்க**

## 6 வாரம் சிறை

வல்வெட்டித்துறை, சனி

நெல்லியடியைச் சேர்ந்த இ. சிதம்பரப்பிள்ளை என்பவர் தனது வீட்டுத் தோட்டத்தில் சில கஞ்சா செடிகளை வளர்த்த குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா அவருக்கு 250 ரூபா அபராதம் விதித்து, அபராதம் கட்டத்தவறின் 6 வாரச் சிறைத்தண்டனை எனத் தீர்ப்பளித்தார்.

## சுகாதார விழா


வல்வெட்டித்துறை, சனி

திக்கம் அ. மி. பாடசாலை சுகாதார விழாவை அடுத்த மாதம் கொண்டாடுவதென்றுபுரக்டர் திரு. பி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. விழாவுக்கான ஒ ங்குகளை கிராமசேவகர் திரு. எஸ். சிவராசா, சுகாதாரப்பரிசோதகர் திரு. எஸ். சண்முகம்பிள்ளை ஆகியோர் கவனிப்பர்.

## 'கேரோ' முறைக்கு ஒரிஸாவில் தடை

ஒரிஸா, மே 27

'கேரோ' கிளர்ச்சி முறை சட்டப்படி குற்றமாகும் என ஒரிஸா அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ளது. தொழில் நிறுவனங்களிலோ வேறு ஸ்தாபனங்களிலோ தொழிலாளர்கள் தமது முதலாளிகளை கட்டாயமாக சுற்றி வளைத்துச் சிறைப் படுத்துவதோ அல்லது கடமையாற்ற விடாது தடுத்து நிறுத்துவதோ தடை செய்யப் படக்கூடிய குற்றமாகும் என ஒரிஸா அரசாங்கம் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.




# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சேவல்கள்:

ஒரு நாள் 20 சதம், ஒரு மாசம் 90 சதம், இரண்டு மாசம் 2/50 சதம், மூன்று மாசம் 4 ரூபா, நாலு மாசம் 6 ரூபா, ஐந்து மாசம் 8 ரூபா. அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1820

பேடுகள்:

ஒருநாள் 2 ரூபா, ஒரு மாசம் 4 ரூபா, இரண்டு மாசம் 6 ரூபா, மூன்று மாசம் 8 ரூபா, நாலு மாசம் 10 ரூபா, ஐந்து மாசம் 15 ரூபா. அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1821

காணி:

பருத்தித்துறை V. M வீதியில் இரத்தினசிங்கம் வழக்கறிஞர் இல்லத்துக்கு முன்னால் குடியிருப்பு நிலம் 2 3/4 இரண்டேமுக்கால் பரப்பும் பருத்தித்துறை கடற்கரை வீதியில் தபாற்கந்தோருக்கு அருகாமையில் தற்கால வீட்டிற்கு அத்திவாரம் போட்டபடி 1 1/2 ஒன்றரை பரப்பு குடியிருப்பு நிலம் விலைக்கு உள்ளது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க. நவரத்தினசாமி, உபாத்தியாயர் இல்லம், ஓடக்கரை, பருத்தித்துறை. 1854

காணி:

யாழ்ப்பாண நகரில் நாலுபுறமும் மதில் சிவரும், கிணறுமுள்ள ஆறு பரப்புக் காணி முழுவதும் முப்பதாயிரம். இரண்டு பரப்பு துண்டுகளாகவும் வாங்கலாம். நேரில் வரவும். செல்லத்துரை, 271, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. 1861

## வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய ப[illegible] கொடிய வியாதிகள் குண[illegible]படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். ம[illegible]திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரண[illegible]ந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## VACANCY

Science Graduate

A vacancy exists for a science graduate for part time teaching [4-30—8 P. M.] Apply Director, Asoka Academy, No 4, St. Patrick's-Road, Jaffna. 1859

## தேவை

வான் விற்பனையாளர்:

வான் விற்பனையாளர் தேவை. பிணைப்பணம் 1000/- நற்சாட்சிப் பத்திரத்துடன் 4 மணிக்கு நேரில் வரவும். அலன் ரீ கொம்பனி, 32, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 1863

நெசவாளர்கள்:

நெசவுத் தொழிலில் நன்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். லீயோடெக்ஸ், வீவிங் இன்டஸ்றீஸ், 45, ஜும்மா மெஸ்கு ஒழுங்கை, [பாட்டா மேல் மாடி], யாழ்ப்பாணம். 1865

ஆசிரியர்:

அரசாங்க நுண்கலை கல்லூரி அல்லது வேறேதாவது அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் [ஆங்கிலமும் தமிழும்] பயிற்சி பெற்ற கலை அல்லது கலையும் கைத்தொழிலும் ஆசிரியர் தேவை. விண்ணப்பிக்கவும். அதிபர், நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலை, கைதடி. 1857

ஆசிரியர்

யாழ்ப்பாணத்திலும், ஏனைய இடங்களிலும் ஆரம்பிக்கவிருக்கும் எமது நிலையத்தின் கிளைகளில், விஞ்ஞானம், கணிதவகைகள், கற்பிப்பதற்கு, G. C. E. உயர்தரம், H. S. C. படித்த ஆசிரியர்கள் உடனே தேவை. விண்ணப்பிக்கவும். கணேசன் கல்விநிலையம், அளவெட்டி. 1847

## கல்வி

வகுப்புக்கள்

கலை, விஞ்ஞானம், வர்த்தகம், சிங்களம் ஆகியவற்றுடன் ஆங்கிலமும் சிறந்த வழிகளில் தேர்ச்சிஅடைந்த ஆசிரியர்களால் கற்பிக்கப் பட்டுவருகிறது. G. C. E. சாதாரண உயர்தர மாணவர்களும் ஏனையோரும் சேர்த்துக் கொள்ளப்படுகிருர்கள். விண்ணப்பிக்கவும். கணேசன் கல்விநிலையம், அளவெட்டி. 1848

## பாடசாலையில் பயிர் செய்கை

தருமபுரம், சனி

தருமபுரம் 2ம் இலக்கப் பாடசாலை வளவுக்குளிருந்த புற்றுக்குள் அழிக்கப்பட்டும் கிடங்குகள் நிரப்பப்பட்டும் பயிற்செய்கை செய்யப் பட்டுள்ளது.

"எமக்கு தரமான சித்த ஆயுர்வேத மருந்துகள் இதுவரை கிடையாதிருந்தது. அதுகாரணமாக கீழத்தேச மருத்துவத்தின் சிறந்த பலன்களை பொதுசனங்களுக்கு வழங்க வசதியில்லாதிருந்தது. முறைப்படி தயாரித்த தரமான சித்த ஆயுர்வேத மருந்துகளை தாங்கள் தந்து உதவுவதனுல் கீழத்தேச மருத்துவ வளர்ச்சிக்கு வசதியாக அமைந்திருப்பதுடன் பற்பல நோய்களுக்கு சித்திகரமாக சிகிச்சையளிக்கக்கூடியதாகவும் இருப்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

டாக்டர் வ. இராமநாதன்,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
திருக்கோணமலை.

எமக்கு வரப்பெறும் அநேக கடிதங்களில் இதுவுமொன்று.

சுந்தரம் பிறதர்ஸ்
சித்த ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள் விற்பனையாளர்
(புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராதாவின் கையிலிருந்த .....

[1-ம் பக்கத் தொடர்ச்சி] சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் திரு. குப்புசாமியின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது சூட்டுச் சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் திரைப்படத் தயாரிப்பாளர் கே. வாசு நேற்று சாட்சியமளித்தார்.

வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்காகப் பெருந்திரளான மக்கள் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர்.

ராதாவின் கையிலிருந்து தாம் எடுத்த ரிவால்வரை தாம் பொலிசாரிடம் ஒப்படைத்ததாக திரைப்படத் தயாரிப்பாளர் வாசு தமது சாட்சியத்தில் கூறினர்.

**'இன்று நினைத்தாலும் நடுங்குகிறது'**

இவ்வருடம் ஜனவரி மாதம் 12-ந் திகதி நடைபெற்ற இச்சூட்டுச் சம்பவம் பற்றி திரு. வாசு தமது சாட்சியத்தில் விபரித்தார். அவர் கூறியதாவது:-

'அன்று நிகழ்ந்த சம்பவங்களை இன்று நினைத்தால்கூட நடுங்குகிறது.

அன்று காலை [ஜனவரி 12-ம் திகதி] நடிகர் ராதா என்னை வந்து சந்தித்தார். திரைப்படம் ஒன்று தயாரிக்கவிருப்பம் கொண்டுள்ள ஒரு கோஷ்டி கோயம்புத்தூரிலிருந்து வந்திருப்பதாகவும் அவர்கள் தங்கள் படத்தில் எம். ஜி. ஆரை கதாநாயகனுக நடிக்கவைக்க விரும்புவதாகவும் கூறினர். அவர்கள் தங்கள் படத்தை கிருஷ்ணன்—பஞ்சுவைக் கொண்டு டைரக்ட் செய்ய விரும்புவதாகவும் ராதா சொன்னர். படத்தயாரிப்பு நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக எனக்கு [வாசு] மாதம் 750 ரூபாய் தருவார்களென்றும் ராதா கூறினர். ராதாவின் வேண்டுகோளுக்கிணங்க நானும் ராதாவும் கிருஷ்ணன்—பஞ்சுவைச் சென்று சந்தித்தோம். முதலில் எம். ஜி. ஆரைச் சந்தித்து முடிவுசெய்துகொள்ளுமாறு கிருஷ்ணன்—பஞ்சு தெரிவித்துவிட்டனர். எம். ஜி. ஆரைச் சந்திக்கஏற்பாடு செய்யும்படி ராதா வற்புறுத்தினர். அன்று பணக்கொடுக்கல் வாங்கல்களுக்கு நல்ல நாளாக இருந்ததால் அன்றே எம். ஜி. ஆரைச் சந்திப்பதற்கு எம். ஜி. ஆருடன் நேரம் ஒழுங்குசெய்துகொண்டேன். இரண்டு தடவை தொலைபேசியில் பேசிய பின்னரே பத்து நிமிஷங்கள் எங்களுடன் பேசுவதற்கு அவர் இணங்கினர்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்குச் சென்று திரும்பியிருப்பதாகவும் மிகவும் களைப்படைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**படுபாவி; சண்டாளா**

அன்று நடந்தது பற்றி வாசு தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

'படுபாவி, சண்டாளா' என்று ராதாவை ஏசியபடியே ராதாவுக்கும் எம். ஜி. ஆருக்கும் நடுவே நின்றுகொண்டு ராதாவின் கையிலிருந்த ரிவால்வரைப் பறித்தெடுக்க முயன்றேன். ஆனுல் எனது முயற்சியைத் தட்டிவிட்டு ராதா தமது தலையில் தம்மைத் தாமே சுட்டுக்கொண்டார்.

**ராதாவை கவனியுங்கள்**

'ராதாவைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று எம். ஜி. ஆர். என்னிடம் சொல்லிவிட்டு தனது வளர்ப்புமகன் அப்புவுடன் எம். ஜி. ஆர். ஆஸ்பத்திரிக்குச் சென்ருர். ராதாவுடன் தனியாக நின்ற நான் ராதாவின் கையிலிருந்த ரிவால்வரைப் பிடுங்கி எடுக்க முயன்றேன். அதற்குள் அவர் தமது தோளில் சுட்டுக்கொண்டார். எப்படியோ ராதாவின் கையிலிருந்த ரிவால்வரை எடுத்துக்கொண்டேன். இதன்பின் ரிவால்வரை பொலிசாரிடம் ஒப்படைத்தேன். ராதா ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

## சாட்சிக்கூண்டில் நின்று வாசு அழுதார்

'உங்களுக்கு யார் மிகவும் வேண்டியவர்? எம். ஜி. ஆரா, எம். ஆர். ராதாவா?' என்று சாட்சி வாசுவிடம் பப்ளிக் பிராசிக்கியூட்டர் கேட்டபோது சாட்சிக் கூண்டில் நின்ற வாதி கண்ணீர் விட்டழுதார். புறங்கையினுல் கண்ணீரைத் துடைத்துக்கொண்ட வாசு, எம். ஜி. ஆரைவிட ராதாதான் எனக்கு மிகவும் வேண்டியவர் மட்டுமல்லாது நானும் ராதாவும் போல வேறு இருவர் எவரும் இருந்திருக்க முடியாது' என்று வாசு சொன்னர்.

சூட்டுச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படும் சமயத்தில் எம். ஜி. ஆர். அணிந்திருந்ததாகக் கூறப்படும் ஷேர்ட்டையும், வேட்டியையும் வாசு நீதி மன்றத்தில் அடையாளம் காட்டினுர். சுடுவதற்கு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் கைத்துப்பாக்கியையும்வாசு அடையாளம் காட்டினுர்.

நான் ஒரு காங்கிரஸ் கட்சி அனுதாபி. இந்திய விடுதலைக்கு முன்னர் காலஞ்சென்ற பிரதமர் நேருஎனது சொந்த ஊரானபுதுக்கோட்டைக்கு வந்தபோது நா அவருக்கு மாலை சூட்டியதற்காக நான் சிறைத்தண்டனை அனுபவித்தேன்.

**முத்துக்குமரன் பிக்சர்ஸ்**

சென்னையில் இருபதுவருடங்களாக வாழ்ந்து வருகிறேன். எனது நடிகை மனைவியான வசந்தாவுடன் வசிப்பதற்காக நான் சென்னைக்கு வந்தேன்.

''முத்துக்குமரன் பிக்சர்ஸ்'' ஒரு லட்சம் ரூபாய் மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. இந்த லட்சம் ரூபாயும் ராதாவிடம் கடனுகப்பெறப்பட்டது. எனது இரண்டாவது மனைவியான சுசீலா, சினிமா டைரக்டர்கள் கிருஷ்ணன், பஞ்சு ஆகியோர் இந்தக் கம்பனியின் டைரக்டர்களாவர்.

முத்துக்குமரன் பிக்சர்ஸின் முதல்வெளியீடு ''பெற்ருல் தான் பிள்ளையா?''

**வட்டியுடன் கொடுக்கப்பட்டது**

'முத்துக்குமரன்பிக்சர்ஸ்' கம்பனி தொடங்குவதற்கு ராதாவிடம் கடனுக வாங்கிய ஒரு லட்சம் ரூபாயும் நாற்பதினுயிரம் ரூபாய் வட்டியுடன் ராதாவிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்ட. ஆனுல் ''பெற்ருல்தா பிள்ளையா?'' என்ற படத்தில் நடித்ததற்காக ராதாவுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. அவர் அந்தப் படத்தில் ஒரு கௌரவ நடிகராக நடித்திருந்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இன்று

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஞானசம்பந்த ஸ்வாமிகள் குருபூஜை மூன்ரும் நாள் விழாவில் காலை 10-30 மணிக்கு விசேஷ பூஜையும் மாலை 3 மணி முதல் விசேஷ மேளக்கச்சேரியும் 5-30 மணிக்கு ஸ்வாமி வீதி உலாப்போந்து நல்லூர் சிவன் கோவிலில் பொற்ருளம் பெறும் உற்சவமும் நடைபெறும்.

இரவு 7 மணிமுதல் ஆதீனத்தில் தருமை ஆதீன வித்துவான் சித்தாந்த செம்மல் திரு. வஜ்ரவேல் முதலியாரது சொற்பணி நடைபெறும்.

## எம். ஜி. ஆர். மறுத்தார்

நீங்கள்தான் ராதாவை முதலில் சுட்டீர்கள், இதிலிருந்துதான் சம்பவம் ஆரம்பித்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன் என்று ராதாவின் வழக்கறிஞர் கூறியபோது எம். ஜி. ஆர். அதை மறுத்தார். நேற்றை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த எம். ஜி. ஆர். வழக்குச் செய்தியில் எம். ஜி. ஆர். மறுப்புத் தெரிவிக்கவில்லை என்று ஓர் இடத்தில் வெளிவந்திருந்தது தவறு. செய்தியின் உள்ளே இது சரியாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## ராதாவுக்கு ஐஸ்கட்டி கொடுக்கநீதிமன்றம் அனுமதி

சென்னை நகரில் இப்பொழுது கடுமையான வெப்பம் நிலவுகிறது. நகரில்108 டிகிரி வெயில் எறிக்கிறது. நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், நடிகர் ராதா தலையிலும், உடலிலும் கிளாஸ்களிலுமுள்ள தண்ணீரை வார்க்கும்படி கேட்டுக்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்த. நாளை தொடக்கம் ராதாவுக்கு ஐஸ்கட்டிகள் கொடுக்க அனுமதியளிக்குமாறு ராதாவின் வழக்கறிஞர் நீதிபதியிடம்கோரினுர். ''ராதாவுக்கு ஐஸ் கட்டிகள் கொடுக்கலாமா?'' என்று சிறைச்சாலை டாக்டரிடம் கேட்டு அதற்கு அவர்இணங்கினுல் ஐஸ்கட்டி கொடுக்க அனுமதியளிப்பதாக நீதிப தெரிவித்தார்.

வாசு இன்று எதிரி தரப்பு வழக்கறிஞர் என். டி. வானமாமலையினுல் குறுக்கு விசாரணை செய்யப்படவிருக்கிருர்.

## கேகாலை தேர்தல் ஆட்சேப வழக்கு செலவுடன் தள்ளுபடி

கொழும்பு, சனி

கேகாலைத் தொகுதிக்கு திரு. பி. பி. ஜி. கலுகல்லை பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தேர்தல் நீதவான் திரு. ஏ. ஈ. புல்மன்ஸ் செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்தார்.

## தாதிகள் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி] தைச்செய்கிருர்களோ தெரியவில்லையென கண்ணீரை ஒற்றிக்கொண்டு மற்றெரு தாதி முறையிட்டார்.

இரண்டு மூன்று பேருக்கு மேற்பட்டவர்கள் சண்டைபிடித்தபின் சண்டை நடந்த இடம் எப்படிக்காட்சியளிக்குமோ அவ்விதம் காட்சியளித்தது,

இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட தாதிகள் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியிடம் புகார்செய்தார்கள். சம்பவம் நடந்த இடத்தையும், கிழிக்கப்பட்டு அங்கு வீசப்பட்டிருந்த தாதிகளின் ஆடைகளையும் யாழ்ப்பாண தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொங்ஸோ சென்று பார்வையிட்டு இதுசம்பந்தமான பூரணவிசாரணையை நடத்துமாறு ஆஸ்பத்திரி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

பூரணவிசாரணை அறிக்கையை ஆஸ்பத்திரி பொலிசார் நேற்றுமாலை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரிடம் சமர்ப்பித்துள்ளனர். திரு. பொங்ஸோ தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்ருர்.

## ஊமையான ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி] த்தபோது சிறு வயதுமுதல் எதிரியை தெரியுமென்றும் காலஞ்சென்றவர் தனது அண்ணன் என்றும் சம்பவம் நடந்த தினம் கடையிலிருந்து வரும்போது சம்பவம் நடந்ததாக கூறினர். விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## கதாப்பிரசங்கம்

நாவற்குழி சித்திவினுயகர் இந்து வாலிபர்சங்க ஆதரவில் இன்றிரவு ஆலய மண்டபத்தில் திரு. சாம்பசிவக்குருக்கள் ''ஔவையும் முருகனும்'' எனும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

## காணவில்லை

மாடும் கன்றும்:

ம. யே. குறியும் நிறம் நரை மாடும் கன்று நிறம் மாவெள்ளை 5-ந் திகதி காணவில்லை. கொண்டுவந்து தருபவருக்கு ரூபா 25 கொடுக்கப்படும். ம. இரத்தினம், 8/1, றக்கா ரோட், சுண்டிக்குளி. 1864

## மரண அறிவித்தல்

### பொ. வேலுப்பிள்ளை

உடுப்பிட்டியைச் சேர்ந்த பொ. வே. சுந்தரதாசினதும் பேரின்பராணி, ஏகாம்பரநாதனினதும் பிதா பொ. வேலுப்பிள்ளை இளைப்பாறிய ஆசிரியர் காலமாகிவிட்டார். இவரது ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு உடுப்பிட்டியில் அவரது இல்லத்தில் நடைபெறும். 230 4


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர். - விஜயா
நடித்த
தாயின் மடியில்

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
STRANGE BED-FELLOWS
9-45 p. m.
ஜோய் முகாஜி
நடித்த
ஆ வோ பியார் கரேன்

மனேஹரா
[யாழ்ப்பாணம்]
சிவாஜி—பானுமதி
நடித்த
அறிவாளி

4-வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ண [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]
தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனேகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.

ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org